## அதிகாரம் 11

# தேசங்கள் பரவுதல்

11ம் அதிகாரத்தின் முதல் பகுதி பாபேல் கோபுரத்தின் கதையைக் கூறுகிறது. ஜலப்பிரளயத்திற்குப் பின் மனிதர்கள் பெருமையினால் தங்களுக்குப் பெயர் புகழுக்காக கோபுரம் கட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றனர் (11:1-4). ஆனால் தேவன் பஷைகளை குழப்பி விட்டமையினால் அவர்களின் திட்டம் தவிடுப் பொடியானது, அவர்களைப் பூமியெங்கும் பரவச் செய்தார் (11:5-9). இவ்அதிகாரத்தின் இரண்டாம் பகுதி சேமின் வம்ச வரலாறு, தேராகு மற்றும் அவரது மூன்று குமாரர்களுடன் நிறைவடைகின்றது (11:10-32). அந்த குமாரருள் ஒருவர் ஆபிரகாம், அவர் மூலமாக தேவன் அவரது கிருபையை உலகிற்கு அருளுவர்.

## மகிமையைப் பெற்றுக் கொள்ள பெரிய கோபுரத்தைக் கட்டுதல் (11:1-4)

**[1]பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது.**
**[2]ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு, அங்கே குடியிருந்தார்கள்.**
**[3]அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்; கல்லுக்குப் பதிலாகச் செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது. [4]பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்கு பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்.**

பாபேல் கோபுர நிகழ்வு, அமைப்பு, நடை, மொழி மற்றும் பயன்படுத்தபட்ட வார்த்தைகளைப் பார்த்தால் அழகான ஒரு கதையைப் போல் வருகின்றது. பாபேல் கோபுர சம்பவம் நோவாவின் ஜலப்பிரளய கதையைப் போல் சமீபத்திய கிழக்கத்திய பாடங்களில் காணப்படுவதுக்கு ஒப்பானதாக இல்லை, இந்நிகழ்வு வேதத்திற்கு மட்டுமே மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதற்கு நெருங்கிய இணையானது *இனுமா இலீஸ்* அல்லது *சிருஷ்டிப்பு புராணம்* என்ற பண்டைய மெசெப்பொத்தோமிய எழுத்துக்களில் உள்ளது. இந்தக்

கதையில் தெய்வங்கள் பாபிலோன் மற்றும் பெரிய கோயில் கோபுரம் ("மேடை கோபுரம்" அல்லது ஜிங்குரட்), கட்டுவதை குறிப்பிடுகின்றது. அதில் தேவர்களின் ராஜா மொர் தேக்குக்கு சிங்காசனம் இருந்தது. "தேவர்களின் உறைவிடம்" உயர்ந்த வனத்தில் தேவர்கள் புசித்துக் குடித்து விருந்துண்டு இளைப்பாறும் சாலையில் புது வருட கொண்டாட்டம் நடத்துவதாகும்.[1]

சுமேரிய மூலவசனம்[2] மக்களெல்லாம் ஒரே பாஷையைப் பேசிய அல்லது பேசப்போகிற ஒரு காலத்தை குறிப்பிடுகிறது. ஆனால் மனிதன் பேசிய பொதுவான மொழி ஒரு அனுபவமா? அல்லது மங்கிய ஒரு அனுபவமா அல்லது எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்பா என்ற ஒத்தக்கருத்து இல்லை. சுமேரியாவின் மூலவசனத்தை எப்படி வியாக்கியானம் செய்கிறோம் என்பதைப் பொறுத்து, இரண்டு முக்கிய தெய்வங்களின் சண்டையின் காரணமாக பாஷைகள் பிரிந்தன எனச் சொல்லப்படுகிறது, என்லில் மற்றும் என்கி அல்லது என்லில் என்ற பெரிய தெய்வத்தை மனிதர்கள் ஆராதிக்காமல் இருப்பதால் தெய்வங்கள் தாக்குதல் ஏற் படுத்தினதினால் பாஷைகள் பிரிந்தன.[3]

மேற்சொன்ன இரு மூல வசனங்களும் வேத விவரணைக்கு முற்றிலும் மாறுபட்டவை. பாபிலோனிய கதையில் தேவர்கள் ஒரு வருடம் செங்கல் அறுத்து, பின் தங்களது கொண்டாட்டத்திற்காக கோபுரத்தைக் கட்டினார்கள். ஆதியாகம விவரணையில் மனிதர்கள் வீணாக ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தி, தங்களுக்குப் பெயர் உண்டாக்க முயன்றனர். தங்களை உயர்த்தவும், இரட்சிக்கவும் மனித வழியில் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ளப் பிளவுக்கு பாலமைக்க மனிதனின் முயற்சி. மேலும் பாஷைகள் பிளவுபட காரணம் ஒன்றான மெய் தேவனுடைய நியாயத்தீர்ப்பே அல்லாமல் தெய்வங்களுக்குள் வந்த போட்டியினால் அல்ல. மனிதனுடைய வைராக்கியத்திற்கும் பெருமைக்கும் வந்த தேவ தண்டனையே பாஷைகளின் தாறுமாறு. பூமியெங்கும் பரவி பலுகிப் பெருக மனிதன் மறுத்தரவும் காரணமாகும் (9:1, 7).

**வசனம் 1. ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும்** என்ற கூற்றுடன் இந்த வசனம் ஆரம்பிக்கிறது. அதுவும் **பூமியெங்கும்** இருப்பினும் 10ம் அதிகாரத்தில் மூன்று இடங்களில் (10:5, 20, 31) மனிதர்கள் பன்மையான மொழிகள் பேசினதாக அறிகிறோம். முன்னதாக நாம் கவனித்தபடி யாப்பேத், காம், சேம் ஆகியோரின் வம்சவரலாறு விவரமானதல்ல, தேர்ந்தெடுக்கப்பட்டவை, யாப்பேத் மற்றும் காமின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று அல்லது நான்கு தலைமுறை மட்டுமே குறிக்கப்பட்டுள்ளனர் ஆனால் சேமின் தலைமுறையினர் ஆறுதலைமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் இரண்டு தலைமுறை முடியும் போது பதிவு செய்யப்படும் அதே தொகுப்பின் கூற்று, சேமின் சந்ததியின் இறுதியில் வரும்

தொகுப்போடு புரிந்து கொள்ளவேண்டும். அடுத்த வம்சவரலாறு சொல்கிறது பேலாகுடைய நாட்களிலே “பூமி பகுக்கப்பட்டது” (10:25). இது பாபேல் கோபுர நிகழ்வுக்குப் பின் பூமியிலே மனிதன் சிதறிப்போனதைக் குறிக்கிறது. பேலாகுக்குப் பின் ஆசிரியர் சேமின் வம்சத்தாரின் பல பெயர்களைப் பட்டியலிடுகின்றார். தொகுப்புக்கூற்றாக தங்கள் தங்கள் “வம்சங்களின்படியேயும்,” “தங்கள் பாஷைகளின்படியேயும்” (10:20, 31).

யாப்பேத், காம் ஆகியோரின் சந்ததியார் சரியாக எப்போது வித்தியாசமான மொழிகளைப் பேசினார்கள் என சரியான காலகிரமமான தகவல்களைத் திரட்டி வழங்க வேண்டுமென்பது ஆசிரியரின் நோக்கமல்ல. ஒவ்வொரு வம்சவரலாறு முடியும் போது அனேக வம்சத்தாரை குறித்தாலும் நோவாவின் குமாரர்களின் தனித் தன்மையை சிறப்பாக வம்சம், மொழி, பட்டணங்கள், ஜாதிகள் எனக் கூறுவார். தேர்வு செய்யப்பட்ட முறையில் கூறிவிட்டு, வேதாகம வரலாற்றை தொடர்வார்.

**வசனம் 2.** ஜலப்பிரளயத்திற்குப் பின் நோவாவின் குமாரர்கள் பெருகினார்கள். **கிழக்கே பிரயாணம் பண்ணினார்கள்** (מִקֶּדֶם, *miqqedem*, மிக்கேடெம்) “கிழக்கு” என்ற பதம் பல விதங்களில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. “கிழக்கு முகமாக” (NJB), “கிழக்குக்கு” (NLT), “கிழக்கிலிருந்து” (KJV; NRSV; ESV), “கிழக்கிலே” (NAB; NEB; REB). NIV இந்த பிரச்சனையை இவ்வசனப்பகுதியில் வரும் வார்த்தையின் பொருள் நன்றாகத் தெரியுமாறு விளக்குகிறது: “கிழக்கு பக்கம்,” என்று வசனப்பகுதியில் குறிப்பிட்டு, ஆனால் மாற்றாக “கிழக்கில் இருந்து” மற்றும் “கிழக்கில்” என்று அடிக் குறிப்பில் விளக்குகிறது. ஆதியாகமம் 13:11ல். லோத்து கானானின் மைய மலை நாட்டுப்பக்கம் செல்ல தீர்மானித்தபோது “கிழக்குப் பக்கம்” சோதோமுக்கு நேராக.[4]

பயணம் மேற்கோண்டார், என்பதிலிருந்து எபிரெய பதத்தின் பொருத்தமான விளக்கத்தை அறியலாம். பாபிலோனியாவின் மற்றுமொரு பெயர் **சிநெயார் தேசம்** (அல்லது பாபிலோன்[5]). இப் பகுதி பேழை தங்கின அரராத்துக்கு தென் பக்கம் உள்ளது. நோவாவின் குடும்பம் பெரிய மெசப்பெத்தோமியாவின் பள்ளத்தாக்கில் பயணப்பட்டு வந்தனர். ஒரு வேளை கிழக்குப்பக்கம் (தென் திசையில்) உள்ள பாபிலோன் சமவெளியிலே வந்து **குடியிருக்கத்** தொடங்கினர். ஆசிரியர் கானானிலிருந்து அல்லது அதற்கு அண்மையிலிருந்து எழுதுகின்றார். நோவாவின் குடும்பம் முவழுவதும் தங்கியிருந்த சினேயார் கிழக்கிலிருந்தது.

**வசனம் 3.** தாங்கள் கட்டப்போகும் கட்டிடத்தின் திட்டத்தைக் குறித்து மக்களின் கலந்துரையாடல் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலப்பகுதியில் கற்களுக்குப் பஞ்சம் எனவே **செங்கல்** அறுத்து, **சுட்டு** [வேகவைத்து] அதை உறுதியாக்கி. **தார்** [அல்லது] **கீல்** கொணடு பூசவும்

திட்டமிட்டனர். ஏனெனில் அது டைகரீல்-யூப்பரட்டீஸ் பள்ளத்தாக்கில் மிக சுலபமாகக் கிடைத்தது. உறுதியான கருங்கற்களுக்கு பதிலாக உறுதியாக்கப்பட்ட **செங்கல்களை** பயன்படுத்தினர் என வசனப்பகுதி சொல்கிறது. பொதுவாக சூரிய ஒளியில் சுடப்பட்ட (வேகவைக்கப்பட்ட) செங்கல்களை, அலுவியல் பள்ளத்தாக்கில் உள்ள சமீபத்திய கிழக்கு மக்கள் தங்கள் வீடுகளையும் தனிப்பட்ட கட்டிடங்களைக் கட்டவும் பயன்படுத்தி இருந்தனர்.

**வசனம் 4. ஒரு நகரத்தையும், வான அளாவ சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும்** கட்ட மக்கள் ஒருவரை ஒருவர் ஊக்கப் படுத்தினார்கள். இந்த கட்டிட திட்டம் தாக்கவரும் எதிரிகளிடமிருந்த தங்களை தற்காக்கும் பெரிய நகரக் கோட்டையாக வியாக்கியானிக்கப்படுத்தப்படுகின்றது. "கோபுரம்" என்ற வார்த்தைக்கு எபிரெயப் பதம் (מִגְדָּל, *migdal*, மிக்டல்) பிற்காலத்தில் இப்படித்தான் அறியப்பட்டது (நியா. 8:9, 17; 9:46-52; சங். 48:12; 61:3; எசே. 26:4, 9). நமக்குத் தெரிந்திருக்கிறபடி இந்தக் கட்டிட திட்டத்தில் இணைந் திருப்பவர்கள் எல்லாரும் நோவாவின் குமார்களே. ஜலப் பிரளயத்திற்கு பின் வேறு எந்த மனிதரும் இருக்கவில்லை. நோவாவின் குமாரர்களுக்கு தற்காப்பு கோபுரங்களைக் கட்ட வேண்டிய அவசியமில்லை.

பாபேல் கோபுரம் பாபிலோனிய ஜிக்குருட் படிபோன்ற பிரமீடின் அமைப்பைக் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். இது கல்லறை அல்ல, பண்டைய எகிப்தின் பிரமீடுகள் போல் அல்ல. ஆனால் இது ஒரு கோயில். பண்டைய மெசெப்பொத்தோமிய மக்கள் ஜிக்குருத்தை வானத்தையும் பூமியையும் தொடும் ஒரு இணைப்பாக மதித்தனர். புதிய வருடத்திலே, படிவழியாக மேலே கோவிலில் ஏறி மேலேயுள்ள கோயிலில் முக்கிய தேவனின் கைகளைத் தழுவும் போது நகரத்தின் ராஜாவுக்கும், ராஜ்ஜியத்திற்கும் நிகழ இருக்கின்ற ஆண்டு செழிப்பும், சமாதானமும், ஆசீர்வாதமுமாக எண்ணப் பட்டது.

பாபிலோனிலிருந்த ஜிக்குருட் மிகப் பெரிய கட்டிட அமைப்பைக் கொண்டிருந்தது என முந்திய பதிவுகளில் கூறப்பட்டுள்ளது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஹெரடொட்டஸ் என்ற சரித்திரவியலாளர் கூறுகையில், இக் கோபுரம் எட்டு அடுக்குகளைக் கொண்டதாக கூறுகின்றார்.[6] இதன் உயரம் சுமார் 200 முதல் 300 அடியாக இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட கற்பனை இது எதோ மிகைப்படுத்திச் சொல்லப்பட்டது போல் தெரியலாம். பிற்காலத்து கோபுரங்கள் இப்படியாக இருந்திருந்தால் கட்டாயமாக உண்மையாகவே பாபேலின் ஆதி கோபுரம் சிறியதாகவே இருந்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. சொல்லப்போனால், வேதாகமம் வரலாறுக்கு அளவு முக்கியமன்று; வசனத்தில் அமைப்பின் நோக்கமே ஆசிரியருக்கு முக்கியமாக விளங்குகின்றது. மனிதர்கள் தேவனை மிக சாமர்த்தியமாகக் கையாள விரும்பினதுமல்லாமல்,

தாங்கள் **உலகெங்கும் எங்கும் சிதறிப்போகாமல்** ஒரே **இடத்திலிருக்கவும் தங்களுக்கு** ஒரு **பெயர் உண்டாக்குவது**மே அவர்களின் **நோக்க**மாக இருந்தது.

திரும்பவும், பெருமையே "பெயர்" (புகழ்[7]) உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்திற்குக் காரணம், இதனால் மிகப்பெரிய கட்டிடம் கட்டும் திட்டத்தை மேற்கொண்டனர். வானத்திற்கும் பூமிக்கும் இடையே உள்ள பிளவை பாலம் அமைப்பது மூலம் தங்களின் கிரியைகளின் மூலம் தேவனைப் பிரியப்படுத்தி, தங்கள் சொந்த இரட்சிப்பையும், ஆசீர்வாதத்தையும் அடையலாம் என நம்பினர்.

ஆதி சமூகத்தில் ஒற்றுமையின்மையின் வித்து முன்னதாகவே இருந்தது; ஒருவேளை அவர்கள் நினைத்திருக்கலாம், இந்த திட்டத்தின் மூலம் தங்களை ஒரே கூட்டமாக சேர்த்து வைக்கும் என இவர்கள் எண்ணியிருக்கலாம். உண்மை யாதெனில் தேவன் தம் மக்களிடையே உண்மையான ஐக்கியத்தை எதிர்பார்க்கிறார். ஆனால் அவர் நோவாவின் குமாரர்கள் இப்படியாக சேர்ந்திருந்து இப்படிப்பட்டதான ஒரு கட்டிட திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக விரும்பியிருக்கவில்லை. வானத்திற்கும் பூமிக்கும் சர்வ வல்லவரான தேவனுக்கு மனிதனின் இருதயத்தில் தீமையானவைகளுண்டு என்று தெரியும் (6:5). இந்த மக்கள் அவருக்கு எதிராக கலகம் செய்தனர். ஜலப்பிரளயத்திற்குப் பின் அளிக்கப்பட்ட கட்டளையான "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (9:1). என்ற இரண்டாம் பாகத்தை ஒரே நகரத்தில் குடியிருப்பதின் மூலம் மீறினார்கள்.

## மனிதர்கள் பெருமையை தேவன் தண்டித்தல் (11:5-9)

**5மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும்
பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார். 6அப்பொழுது கர்த்தர்: இதோ,
ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும்
ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச்
செய்யத்தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது
ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். 7நாம்
இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு,
அங்கே அவர்கள் பாஷையைத் தாறு மாறாக்குவோம் என்றார்.
8அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும்
சிதறிப்போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை
விட்டுவிட்டார்கள். 9பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர்
அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல்
என்னப்பட்டது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து
பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்.**

**வசனம் 5.** இந்த வசனம் கதையில் ஒரு திருப்புமுனையாக அமைகிறது. பூமியிலிருந்து வானத்தை நோக்கி காட்சி மாறுகின்றது. பாஷை எதிரிடையாகவும், எழுத்தின்படி இல்லாமலுமிருக்கிறது. **கர்த்தர் மனுபுத்திரர் கட்டும் நகரத்தையும், கோபுரத்தையும் பார்க்க இறங்கினார்** எனக் கூறுகின்றது. இக் கூற்றினை எழுத்துப்படி எடுத்துக்கொள்ளக்கூடாது, ஏனெனில் தேவன் காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டவராவார் (சங். 139:7-12). மனிதர்கள் என்ன செய்கின்றனர் என நன்கு காண்கிறவராயும் அறிகிறவராயும் இருக்கிறார் (நீதி. 15:3; எரே. 23:24; எபி. 4:13). பாபிலோனிய மக்களின் திட்டம் ஒரு கோபுரத்தைக் கட்ட வேண்டும், அதன் உச்சி வானத்தைத் தொட வேண்டும், இத்திட்டம் தேவனின் பார்வையில் மிக அற்ப முக்கியத்துவமான காரியமாகும், ஞானார்த்தமாக அவர் "இறங்கி வந்தார்" பூமிக்கு அண்மையில் "பார்ப்பதற்காக."

**வசனம் 6.** அவருடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்று சொல்கிறது. **கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள்** என்ன **செய்யத் தொடங்கினார்கள்** என்று அவர் பார்த்தார்; செயல்பாடு யாதெனில் தேவன் இத்திட்டத்தை அனுமதித்தால், **இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.** இது மனிதனின் சக்திக்கோ, ஞானத்திற்கோ, தேவன் பயப்படுகின்றார் என்பதல்ல. இது ஒரு அன்பு பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமுள்ள கரிசனையைக் காட்டுகின்றது - இது தற்காலத்திற்கு மட்டுமல்ல, எதிர் காலத்திற்குமானது. அவர்களின் கர்வம் கொண்ட பாதையில் அவர்கள் போக அனுமதிக்கப்பட்டால் தங்களையே கெடுத்துக்கொள்ளும் ஜலப்பிரளயத்திற்கு முந்தைய காலத்திற்கு அவர்களை இட்டுச் செல்லும் என அவர் அறிவார். இந்த மொழி ஏதேன் தோட்டத்தில் கர்த்தர் பேசின வார்த்தையைப்போல் உள்ளது. அவர் சொன்னார்: "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும்" (3:22). விழுந்துபோன உலகிலே என்றென்றும் பாவிகளாக பூமியிலே என்றென்றும் ஜீவித்திருப்பது நரகத்தைப் பூமியிலேயே அனுபவிப்பதாக இருக்கும். தேவன், தம் கிருபையினால் மனிதனை அப்படிப்பட்ட முடிவிலிருந்த தப்புவிக்க விரும்பினார்.

**வசனங்கள் 7, 8. நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்** என்ற கர்த்தருடைய வார்த்தைகள் சில மனிதர்கள் சொன்னதை "நமக்கு ஒரு நகரத்தை, கட்ட, வாருங்கள்" (11:4) எனச் சொன்ன வார்த்தையை பின்னாக மாற்றியது. திரும்பவும், ஏதேன்

தோட்டத்தில் யெகொவாவின் கவனிப்பைப் போலிருக்கிறது. "மனுஷன் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்"; (3:22) ஆதாம் ஏவாளின் ஆணவமான ஆசையை அடக்கும்படி அவர்களை ஏதேனிலிருந்து துரத்தி "ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" (3:24). "நம்மை" என பன்மை பயன்படுத்தப்பட்டுள்ளது (3:22) அது தேவனையும் 3:24 லிலுள்ள "கேருபீன்களையும்" குறிக்கிறது; கேருபீன் உள்ளிட்ட அனைத்து தேவதூத சேனையை தேவன் இங்கு குறிப்பிடுகின்றார் (ஆகிய விளக்கங்களை காண்க 1:26; 3:22). 11:7ல் தேவன் அதே தேவதூதர்களின் சேனைகளின் குழுமத்துடன் பேசியிருக்கக்கூடும், பாபேல் கோபுரத்தைக் கட்டுபவர்கள் மீது வரப்போகின்ற நியாயத்தீர்ப்பைக் கவனிக்கவும் அதிலே பங்கெடுக்கவும் ஊக்கப்படுத்தியிருக்க வேண்டும். பாஷையை தாறுமாறாக்கின தினால் அவர்கள் ஒருவர் பேசுவதை ஒருவர் அறியாதவாறு செய்தார். எனவே அவர்கள் திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர். **அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள் அவர்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போனார்கள்.**

**வசனம் 9.** ஆசிரியர் இறையியல் முடிவை முன் நிறுத்தி முரண்பாடான ஒரு வினைச்சொல்லில் ஒரு வார்த்தை விளையாட்டுச் செய்கிறார். (בָּבֶל, *Babel*, பாபேல்) **பாபேல்** என்ற பதம் பாபிலோனியர்களுக்கு "தேவனுடைய வாசல்"[8] எனப் பொருள்படும்; பாபிலோனியர்களுக்கு. எப்படியிருப்பினும், வேதாகம ஆசிரியர் பொதுவான சொல்லிலக்கணத்தைப் பயன்படுத்தி அதற்கு இசைவான எபிரெய தொனியான வார்த்தை "பாபேல்" (בָּלַל, *balal*, பலல்), **குழப்பம்** என்ற பொருள் கொண்ட பதத்தைப் பயன் படுத்துகின்றார்.[9] கோபுரம் கட்ட விரும்பினவர்கள் தங்களது திட்டங்களை நிறைவேற்றுகின்ற வாசலாகக் கருதியதை தேவன் ஒன்றும் இல்லாததாக மாற்றி விட்டார் என வெளிப்படுத்துகின்றார். இந்தக் கோபுரம் குழப்பத்திற்கான வாசலெனவும் வஞ்சகப் புகழ்சியாகக் கூறுகின்றார். இந்த தெய்வமற்றத் திட்டத்தினால் எல்லா மனிதர்களின் **பாஷையும்** குழப்பத்திற்குள்ளானது. பண்டைய பாபேல் (பாபிலோனிய) மக்கள் அவர்களது திட்டத்தை நிறைவு செய்யத் தவறிவிட்டனர், **கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப் போகப்பண்ணினார்.**

## சேமின் குடும்ப வம்ச வரலாறு (11:10-26)

**10சேமுடைய வம்சவரலாறு: ஜலப்பிரளயம் உண்டாகி இரண்டு
வருஷத்திற்குப் பின்பு, சேம் நூறு வயதானபோது, அர்பக்சாத்தைப்
பெற்றான். 11சேம் அர்பக்சாத்தைப் பெற்றபின் ஐந்நூறு வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
12அர்பக்சாத் முப்பத்தைந்து வயதானபோது சாலாவைப் பெற்றான்.
13சாலாவைப் பெற்றபின் அர்பக்சாத் நானூற்று மூன்று வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 14சாலா
முப்பது வயதானபோது, ஏபேரைப் பெற்றான். 15ஏபேரைப் பெற்றபின்
சாலா நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும்
குமாரத்திகளையும் பெற்றான். 16ஏபேர் முப்பத்துநாலு வயதானபோது,
பேலேகைப் பெற்றான். 17பேலேகைப் பெற்றபின் ஏபேர் நானூற்று
முப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும்
பெற்றான். 18பேலேகு முப்பது வயதானபோது, ரெகூவைப் பெற்றான்.
19ரெகூவைப் பெற்றபின் பேலேகு இருநூற்றொன்பது வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 20ரெகூ
முப்பத்திரண்டு வயதானபோது, செரூகைப் பெற்றான். 21செரூகைப்
பெற்றபின் ரெகூ இருநூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும்
குமாரத்திகளையும் பெற்றான். 22செரூகு முப்பது வயதானபோது,
நாகோரைப் பெற்றான். 23நாகோரைப் பெற்றபின் செரூகு இருநூறு
வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
24நாகோர் இருபத்தொன்பது வயதானபோது, தேராகைப் பெற்றான்.
25தேராகைப் பெற்றபின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 26தேராகு
எழுபது வயதானபோது, ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப்
பெற்றான்.**

பாபேல் கோபுரத்தின் வரலாறு ஆதியாகமம் முதல் பகுதியின் முடிவு அல்ல. அப்படியே ஆயினும், முதல் பகுதி மனிதனின், பாவம், பெருமை, தோல்வி போன்ற பாவத்தின் ஆதாரங்களின் குறிப்பாக மாறியிருக்கும். இதற்கு பதிலாக, முன் அதிகாரங்களில் காண்பதுபோல் தேவனது கிருபை தேவனது நியாயத்தீர்ப்பின் நடுவிலும் இருந்தது. நோவாவின் சந்ததியாரின் சிதறலையும், அவர்களின் பாஷைகளின் குழப்பத்தையும் தொடர்ந்து, சேமுடைய இன்னொரு வம்சவரலாறு கொடுக்கப்பட்டிருக்கிறது, அது ஒரு நம்பிக்கையை கொண்டிருக்கிறது. 10ம் அதிகாரத்தின் பட்டியலில் ஏபேரின் இரு குமாரர்களான பேலேகு மற்றும் யோக்தானின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. ஆனால் பிந்தியவனின் தலைமுறை மட்டுமே பட்டியல் இடப்பட்டுள்ளது (10:25-31). இக் கூற்றுக்கு எதிராக 11ம் அதிகாரத்தில் வரும் வம்சவரலாறு

சொல்கிறது ஏபேருக்கு ஏராளமான குமாரர்களும் குமாரத்திகளும் இருந்துள்ளனர் (11:17). ஆனால், ஆபிரகாம் வரைக்கும் பேலேகும் அவன் சந்ததி மட்டுமே பட்டியலிடப்பட்டுள்ளனர் (11:16-26). மனுக்குலத்திற்கு தேவனுடைய ஆசீர்வாதம் ஏமாற்றமளிக்கக் கூடியதல்ல என வாசகர்களுக்கு வாக்களிக்கக் கூடியதாகிறது; ஆபிரகாம் ஆசீர்வாதத்தை மற்றவர்களுக்குக் கொண்டு செல்லும் கருவியாக இருக்கக்போகிறார். அவர் மூலம் "பூமியிலுள்ள வம்சங்களுக்கெல்லாம்" (12:3) ஆசீர்வாதம் பாயப்போகிறது.

சேமுடைய வம்சவரலாறு (தேராகுடைய வம்சம் அடங்க) 11:10-32ல் சேத்துடைய குடும்பத்தின் வழியாக 5:3-32ல் முடிகிறது. தேவன் வரலாற்றில் மனித குலத்துக்குத் தமது மீட்பின் திட்டத்தை செயல்படுத்தப் போகிறார். 11ம் அதிகாரத்தின் விவரணை குறுகலானது, தேராகு வரைக்கும் ஒவ்வொரு முக்கிய சந்ததியிலும் ஒரு முக்கியமானவரையே பட்டியலிடுகிறது. பின்னர் தேராகுவின் மூன்று குமாரர்கள் முறையே ஆபிராம் (ஆபிரகாம்), நாகோர், ஆரான். முதலில் பட்டியலிடப்பட்ட ஆபிரகாம் குடும்பத்தில் முதன்மையானவராக வருகின்றார்.

5ம் 10ம் அதிகாரங்களில் உள்ளதுபோல "10" மற்றும் "7" என்ற எண்கள் 11ம் அதிகாரத்தில் மிகவும் முக்கியமானவைகளாகும். உதாரணமாக, 5ம் அதிகாரத்தில் ஆதாம் முதற் கொண்டு நோவாவும் அவன் குமாரர்: சேம், காம் யாப்பேத் (5:32) வரைக்கும் 10 பெயர்கள். ஜலப்பிரளயத்திற்கு முந்திய மற்றும் பிந்தியக் காலங்களை இணைக்கும் பாலமாக நோவா செயல்பட்டபடியினால் அவருடனே 11ம் அதிகாரத்தின் பட்டியல் தொடங்குவதே முறையாகும். சேமுடைய வம்சபட்டியல் பத்து தலைமுறையைக் கொண்டிருந்து, தேராவின் மூன்று குமாரர்களுடன் நிறைவுபெருகின்றது: "ஆபிராம், நாகோர், ஆரான்" (11:26).[10] நோவாவை ஜலப்பிரளயத்திற்கு பிந்திய யுகத்தில் சேர்க்காமலிருந்தால், ஆபிரகாம் சேமிலிருந்து பத்தாம் தலைமுறையாகவும், ஆதாமிலிருந்து இருபதாம் தலைமுறையாகவும் இருந்திருப்பார் (10x2).[11] ஏபேரிலிருந்து அவர் ஏழாம் தலை முறையும், இவரிலிருந்து எபிரெயர்கள் தோன்றினர். ஏபேர் ஆதாமிலிருந்து பதினான்காவது தலைமுறை (7x2).[12]

"7" என்பது நிறைவையும் பரிபூரணத்தையும் அடையாளப் படுத்துகிறபடியால், ஆபிரகாம் ஏபேரிலிருந்து ஏழாம் தலை முறையாக இருப்பது தற்செயலாக நிகழ்ந்துள்ளதாக பெரிய "பெயரு" க்குரியவராகிறார் (12:2). தேவனிடமிருந்து மிக பொருத்தமான வரமாகிய "பெயரை" (பெருமையை) பெறுவது தேவனுடைய கிருபையின் திட்டம் அவர் மூலமாக பரிபூரணமாக "பூமியிலிருக்கும் எல்லா குடும்பங்களை" ஆசீர்வதிப்பதைச் சுட்டிக்காட்டுகிறது (12:3). விசுவாசிகள் எல்லாருக்கும் ஆவிக்குரிய

தகப்பனாராயிருக்கும்படியாவார் (ரோமர் 4:11). தேவ நாமம் மகிமைப்படும்படியாக இவையெல்லாம் நடக்கும். பாபேலில் இருந்த மக்களைக்காட்டிலும் ஆபிரகாமைப் பற்றிய இந்த சிந்தனை முரண்பாடாயுள்ளது. அவர்கள் மிகவும் பெருமையுடன் சுய மகிமையை அடையாளமாகிய கோபுரம் கட்டி தங்களுக்குப் "பெயர்" உண்டாக்க முனைந்தனர் (11:1-9). பெரியப் *பெயரெடுப்போம்* என்ற அவர்களது முயற்சி தோல்வியானதே இறுதி முடிவு; பின் சந்ததிக்கு *அவமானத்தையே* மரபாக விட்டுச் சென்றனர்.

**வசனங்கள் 10, 11.** நோவாவின் வம்சத்தில் 3:15ல் வாக்குப்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்தாக இருப்பவருடன் தொடர்பு பற்றியுள்ளது. ஆதியாகமத்தில் இந்த அறிமுகமான தலைப்பை நான்கு முறை சிந்தித்துவிட்டோம். இம்முறை இது **சேமுடைய வம்சத்தில்** [תּוֹלְדֹת, *toledoth*, டொலெடொத்] பட்டியலிடப்பட்டுள்ளது. அது இவ்வதிகாரத்தின் இறுதியில் ஆபிரகாமில் நிறைவடைகின்றது.

வசனம் சொல்கிறது, **ஜலப்பிரளயம் உண்டாகி இரண்டு வருஷத்திற்குப் பின்பு, சேம் நூறுவயதானபோது, அர்பக்சாத்தைப் பெற்றான்.** சேம், நோவாவின் மூன்று குமாரருள் மூத்தவர் என்ற ஒரு சிந்தனையைக் கொண்டிருக்கும் வாசகருக்கு ஒரு பிரச்சனையை வழங்குகின்றது (10:21 குறிப்பை கவனிக்கவும்). பூமியின் மீது ஜலப்பிரளயம் வந்த போது 5:32 மற்றும் 7:6ன் படி ஒரு வாசிப்பு நோவாவின் மூத்த மகனுக்கு 100 வயது எனவும், 11:10ன் படி சொல்கிறது ஜலப்பிரளயத்தின் இறதியில் சேமின் வயது 98 என்கிறது. இந்த முரண்பாடு எவ்வாறு சீர் செய்யப்படப்போகிறது?

ஆதியாகமம் 5:32 நோவாவுக்கு 500 வயதான போது சேம், காம், யாப்பேத்து பிறந்தனர் என ஒரு வேளை தோராயமாகச் சொல்லப்பட்டிருக்கலாம் (காண்க NRSV; NIV). இந்த வசனம் இப்படியாக புரிந்துகொள்ளப்பட்டிருந்தால் சேம், நோவாவுக்கு 502 வயதாக இருக்கும் போது பிறந்திருக்கலாம்; அப்படியெனில் சேமுக்கு 100 வயதாகும் போது நோவாவுக்கு 602 வயது. அதாவது ஜலப்பிரளயத்திற்கு பின் இரண்டாம் ஆண்டு (காண்க 7:6; 8:13). அப்படியானால் பிரச்சனை தீர்ந்தது.

மற்ற தீர்வுகளும் உண்டு, 100 வயது என்பது 11:10ல் ஒரு பூரணமான எண். அல்லவெனில் 5:32ல் 500 என்பதை இந்த கண்ணோட்டத்தில் வாசிக்கவேண்டும். 5:32 ஐ அப்படி எழுத்துப்படி வியாக்கியானம் செய்யத் தொடங்கினால், சேம் காம் மற்றும் யாப்பேத் ஆகியோர் மூன்று குழந்தைகளும் ஒருமித்து பிறந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு வேதத்தில் எந்த ஒரு ஆதாரமும் இல்லை.[13]

காலவரிசை பிரச்சனை எதுவும் இல்லை, யாப்பேத் மூத்த குமாரனாக இருந்தால் (ஆகிய விளக்கங்களை காண்க 10:21). ஜலப் பிரளயத்தின் போது யாப்பேத்துக்கு 100 வயதும், பிரளயத்தின் முடிவில்

சேமுக்கு வயது சுமார் 98 ஆக இருந்திருக்க வேண்டும். இன்னொரு வாரத்தையில் சொல்லவேண்டுமானால் சேமைவிட யாப்பேத் இரண்டு அல்லது மூன்று வயது மூத்தவராவார், காம் இவ்விரு சகோதரரைக் காட்டிலும் மிகவும் இளையவராவார் (9:24). இந்த வாசிப்பு பிறப்பு வரிசையை யாப்பேத், சேம் மற்றும் காம் என்பதாக ஆக்கும். சேமை முதன்மையாக வைப்பதின் நோக்கம் இறையியல் காரணமேயன்றி காலவரிசையில் சார்ந்ததல்ல.

அடுத்ததாக **சேம் அர்பக்சாத்தைப் பெற்றபின் ஐந்நூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்** என்று வசனம் கூறுகிறது. 10:22ல் அர்பக்சாத், சேமின் நான்கு குமாரர்களில் மூன்றாம் குமாரன். ஆகவே வம்ச வரலாற்றில் முதன்மைக்கான தேர்ந்தெடுப்பு தேவனுடையது, முதல்பேறான பிறப்பைப் பொறுத்ததல்ல. மேலும், சேம் 100 வயதில் குழந்தைப் பெற்று, 600ம் ஆண்டில் மரித்தார் என்பது ஜலப்பிரளயத்திற்கு முன் வாழ்ந்தவர்களுக்கும் பின்பு வாழ்ந்தவர்களுக்கும் இடைப் பட்டவராவார். உதாரணமாக, 5ம் அதிகாரத்தில் ஒவ்வொருவரும் சராசரியாக குழந்தைகளைப் பெற்றபோது 156, மற்றும் வயது. சராசரியாக மரிக்கும்போது 858 வயது. 11 அதிகாரத்தில் ஜலப் பிரளயத்திற்குபின் ஒவ்வொருவரும் குழந்தைகளைப் பெற்றபோது சராசரியாக 43 வயது, மற்றும் மரிக்கும்போது சராசரியாக 333 வயது.

**வசனங்கள் 12, 13. அர்பக்சாத்** 35 வயதான போது **சாலாவைப்** பெற்று, சாலாவைப் பெற்றபின் 403 ஆண்டுகள் வாழ்ந்தார் (ஆகிய விளக்கங்களை காண்க 10:24). ஜலப்பிரளயத்திற்கு பின் முற்பிதாக்களின் ஆயுள் குறையத் தொடங்கியது. அர்பக்சாத் (438 வருடம்) தன் தகப்பனார் சேமின் (600 வருடம்) ஆயுளைக் காட்டிலும் மூன்றில் இரண்டு பாகமானது. மனிதனுடைய ஆயுள் 120 வயதுக்கு குறைவதின் தொடக்கமென சிலர் கருதுகின்றனர் (ஆகிய விளக்கங்களை காண்க 6:3).

**வசனங்கள் 14, 15. ஏபேர்** பிறந்த போது **சாலாவுக்கு** 30 வயது, ஏபேர் பிறந்தபின் சேலா 403 வருடம் இருந்து, மொத்தம் 433 வருடம் உயிர் வாழ்ந்தார் (ஆகிய விளக்கங்களை காண்க 10:24).

**வசனங்கள் 16, 17. ஏபேர்** 34 வயதாயிருக்கையில் **பேலேகைப்** பெற்று, பின் 430 ஆண்டுகள் உயிரோடிருந்து 464ம் வயதிலே மரித்தார் (ஆகிய விளக்கங்களை காண்க 10:24). யூதர்கள் ஏபேரிலிருந்து தோன்றியவர்களாவார். "எபிரெயர்" என்ற பெயர் ஏபேரிலிருந்து தோன்றியது, ஆனால் வம்சவரலாற்றில் குறைவாகவே அறியப் பட்டிருந்த இவரதுப் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வசனங்கள் 18, 19. பேலேகுக்கு** 30 வயதான போது **ரெகூ** பிறந்தார். பின் 209 வருடம் இருந்து 239ம் வயதில் மரித்தார் (ஆகிய விளக்கங்களை காண்க 10:25).

பேலேகுக்குப் பின்னர் சேமின் வம்சத்தாரின் ஆயுள் காலம் துரிதமாக குறைய தொடங்கியது பேலேகு அவன் தந்தை ஏபேரின் வாழ்நாட்களின் பாதி நாட்களே உயிரோடிருந்தான். இவர் ஏபேரின் வம்சத்தில் தேர்தெடுக்கப்பட்டவர் தேர்ந்தெடுக்கப்படாதவர் இடையே பகுப்பைக் கொண்டு வந்தார். இந்த வரிசையின் இரண்டு பிரிவுகளில் எது இரட்சிப்பிற்கு அல்லது நியாயத்தீர்ப்புக்கு விதிக்கப்பட்டதென தனிப்பட்டவர்களை வைத்துக்கூறிட இயலாது, ஆனால் எந்த தனிப்பட்டவர் சந்ததி ஆபிரகாமை, இஸ்ரவேலை எல்லாவற்றுக்கும் மேலாக இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு கொண்டு வரும் என்பது தேவன் பயன்படுத்தப் போகும் வரிசையை அடையாளப்படுத்தப் போகிறது.

**வசனங்கள் 20, 21.** பழைய ஏற்பாட்டில் இந்த சூழலிலே மட்டுமே பேலேகின் மகன் **ரெகூ** குறிப்பிடப்படுகிறார். சிலர் இப் பெயரை “ரெகுவேலு” டன் ஒப்பிட்டுச் சொல்வார்கள். ஏசாவின் ஒரு மகன் இப்பெயரைத் தாங்கியிருந்தார் (36:4, 10, 13). மற்றொரு “ரெகுவேல்” மோசேயின் மாமனார் (யாத். 2:18). இப் பெயருக்குப் பொருள் “தேவனுடைய நண்பன்” என்பதாகும். ரெகூ 32 வயதான போது **செரூகைப்** பெற்றார். பின் 207 ஆண்டுகள் வாழ்ந்தார். தன் தகப்பனார் பேலேகைப் போல் 239வது வயதில் மரித்தார்.

**வசனங்கள் 22, 23. செரூகு** பேலேகின் “வம்சம்” அல்லது “இளைய கிளை” என அடையாளம் காட்டப்பட்டுள்ளார். இது எபிரெய வார்த்தை (שָׂרִיג, *śarig*, *சரிக்*), சேரீக் என்ற வார்த்தையுடன் தொடர்புள்ளது. படர்கொடியின் கொம்பு அல்லது கொடிமரம் எனப்பொருள் கூறலாம்[14] “சேரீக்” என்பது “செர்கி” என்ற அசீரியர்கள் அல்லாதவர்களின் பட்டணம் மேற்கு மெசெப்பொத்தோமியாவில் உள்ள பண்டைய ஆரானுக்கு முப்பத்தைந்து மைல் மேற்கே அமைந்துள்ளது.[15] 30வது வயதில் செரூகு **நாகோரைப்** பெற்றார். பின் 200 ஆணடுகள் வாழ்ந்து தனது 230வது வயதில் மரித்தார்.

**வசனங்கள் 24, 25. நாகோர்** 29 வயதாயிருக்கும் போது **தேராகைப்** பெற்றார். பின்னர் 119 வருடங்கள் வாழ்ந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். தமது 148 வது வயதில் மரித்தார்.

**வசனம் 26. தேராகு** இப்பகுதியில் அறிமுகம் செய்யப்படும் கடைசி நபர், தமது 70வது வயதில் தேராகு, **ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்**. இந்த மூன்று பேரால் வந்த எல்லா மக்களின் மூதாதையராக இருந்தார். இவர் குமாரர்களைப் பெற்றப்பின் 135 வருடம் வாழ்ந்து பின்பு தமது 205ம் வயதில் மரணமடைந்தார் (11:32).

“நாகோர்” என்பது ஆபிரகாமின் தாத்தாவின் பெயராகவும் இருந்தது (11:24). மற்றும் அவரின் ஒரு சகோதரரும் இதே பெயரை உடையவராக இருந்தார் (11:26). பின்னவர் முற்பிதாக்களின் வாழ்வில் மிக

முக்கியமானவர் (22:20-24; 31:53). மற்றும் நாகோரின் பட்டணம். என்று 24:10ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலர் இதை நாகருடன் இதை சம்பந்தப்படுத்தியுள்ளனர், இது பல பழமையான மெசெப்பெத்தோமிய வசனங்களில் ஆரானுக்கு அருகில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.[16] “நாகோரின் பட்டணம்” ஒரு வேளை இதே பெயரில் இருந்திருப்பதற்கு வாய்ப்பில்லை, ஆனால் நாகோர் வாழ்ந்த பட்டணமாக இது இருந்திருக்கக்கூடும். அது ஆரான் (11:31; 27:43; 28:10; 29:4).

## தேராகுவின் குடும்பம் (11:27-32)

இந்தப் பகுதி மிக முக்கியம், ஏனெனில் 1 முதல் 11 அதிகாரத்தின் முன் வரலாற்றிலிருந்து தேவன் தெரிந்துகொண்ட மக்களுடைய முற்பிதாக்களின் வரலாறு அதிகாரம் 12 முதல் 50 வரை வரலாறு மாறுகிறது. இங்கு ஆபிராம் அல்லது ஆபிரகாமின் அறிமுகம், இவரே வேதாகம கதையின் மையம். தேவன் தன்னை “ஆபிரகாமின் தேவன்” எனவும் அவரது சந்ததியின் தேவன் எனவும் யாத்திராகமம் 3:6, 15ல் அறிமுகப்படுத்துகின்றார். கிறிஸ்தவர்கள் பவுலால் (கலா. 3:7) “ஆபிரகாமின் மக்கள்” என அழைக்கப் படுகின்றனர்.

### தேராகுவின் வழிவந்தோர் (11:27-30)

**27தேராகுடைய வம்சவரலாறு: தேராகு ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான் லோத்தைப் பெற்றான். 28ஆரான் தன் ஜந்ம பூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணத்திலே தன் தகப்பனாகிய தேராகு மரிக்குமுன்னே மரித்தான். 29ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண் கொண்டார்கள்; ஆபிராமுடைய மனைவிக்குச் சாராய் என்று பேர்; நாகோருடைய மனைவிக்கு மில்க்காள் என்று பேர்; இவள் ஆரானுடைய குமாரத்தி; அந்த ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்கும் தகப்பன். 30சாராய்க்குப் பிள்ளையில்லை; மலடியாயிருந்தாள்.**

**வசனங்கள் 27, 28.** தேராகுடைய **வம்சவரலாறு** [תּוֹלְדוֹת, *toledoth*, டொலெடொத்] ஆறு சிறிய வசனங்களாலானது (11:27-32). தேராகு இங்கு இல்லாமல் வேறு எங்கும் ஆதியாகமத்தில் குறிப்பிடப் படவில்லை, இவர் ஒருவேளை ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பின்பற்றவில்லை, **ஆபிராம்**, **நாகோர்**, மற்றும் **ஆரான்** ஆகியோர் தேராகின் குமாரர்களாக பட்டியலிடப்பட்டுள்ளனர். பெயர்கள் பிறப்பின் வரிசையில் ஒருவேளைக் கொடுக்கப்படாமலிருக்கலாம். ஆபிரகாமின் பெயர் முன்பாக வந்துள்ளதினால் அவர் தேராகின் மக்களுள் முதல் பிறந்தவர் என்பதினால் அல்ல. ஆனால் ஆதியாகமம் 12:3ன் படி வாக்குத்தத்தத்தை இவரது வழி வந்தவரே முன்நடத்திச்

செல்ல வேண்டும். ஒரு காலம் வரும் அன்று இவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றும் எல்லா விசுவாசிகளுக்கும் இவர் பிதாவாயிருப்பார் (ரோமர் 4:12, 16).

**ஆரான்**, ஆபிரகாமுடைய சகோதரர் **லோத்தின்** தகப்பனார். இவர் **தன் தகப்பனாகிய தேராகுவுக்கு** முன்னதாகவே தங்களின் மூதாதையரின் **ஊர் என்ற கல்தேயரின்** இல்லத்திலேயே மரித்துவிடுகின்றார். ஊர் நகரத்தைப் பற்றிய குறிப்பு இங்கும் மற்றும் 11:31லும் பெர்சியா வளைகுடாவில் உள்ள தென் மெசெப்பொத்தோமியாவில் இருந்த பெரிய பட்டணத்தை சந்தேகத் திற்கு இடமின்றி குறிக்கிறது. வட மெசெப்பொத்தோமியாவிலுள்ள ஊர்ஃபாவோ, ஆர்மீனியாவிலுள்ள ஊராவோ அல்ல. ஊர் கி.மு. மூன்றாம் ஆயிரமாவது ஆண்டிலே மத சம்பந்த மற்றும் அரசியல் செல்வாக்குள்ள நகரம். இதை ஆண்ட மன்னன் ஊர்-நாம்மூ என்பவராவார். இவரது சட்ட விதிகளுக்காகவும், இவர் கட்டின பெரிய ஜிக்குரூட் ஆகியவைகளுக்காகவும் இவர் போற்றப் படுகின்றார். கட்டிட இடிபாடுகள் இன்றைக்கும் காணப் படுகின்றன.[17]

"கல்தேயரின்" ஊர் என்று அடையாளப்படுத்துவது இதே பெயரில் உள்ள வேறு ஊர்களிலிருந்து வித்தியாசப்படுத்தவே, ஆதாரங்களின் அடிப்படையின் பேரில் கல்தேயர்கள் (அசீரியாவின் கல்து) கி.மு. 1000மாவது ஆண்டு வாக்கில் பண்டைய பாபிலோனி யாவிற்குக் குடிபெயர்ந்தனர், இது ஏறக்குறைய ஆபிரகாம் அங்கிருந்து சென்ற 1000 ஆண்டுகளுக்குப் பின் நடந்தது. இது உண்மையானால், ஆபிரகாமுடைய காலத்திலேயோ அல்லது மோசே ஆதியாகமத்தை எழுதின போதோ "கல்தேயருடைய ஊர்" என வழங்கப்பட்டிருக்கப்படவில்லை எனத் தெரிகிறது. இக் காரணங்களால், "கல்தேயரின்" என உள்ளது பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் பின்பு பதிப்பாசிரியரால் சேர்க்கப் பட்டிருக்கலாம்.

**வசனங்கள் 29, 30.** ஊரில் இருக்கும் போதே **ஆபிராமுக்கும் நாகோருக்கும்** திருமணம் நடந்திருக்கிறது. **ஆபிராமின் மனைவி** பெயர் **சாராய்**, இவர் பிற்காலத்தில் ஆபிராமுக்கு ஒன்றுவிட்ட சகோதரியாக அடையாளப்படுத்தப்படுகிறார் (20:2, 5, 12). இவர் **மலடியாய்** இருந்தார். **நாகோரின் மனைவி மில்க்காள் இவர் ஆரானின் மகள்** அப்படியெனில் நாகோர் தன் சகோதரரின் மகளை விவாகம் செய்துள்ளார்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஒன்றுவிட்ட சகோதரியை மணமுடிப்பது பின்னால் தடை செய்யப்பட்ட ஒன்று (லேவி. 18:9; 20:17; உபா. 27:22), ஆனால் மாமா தன் சகோதரியின் மகளை விவாகம் செய்யத் தடையில்லை. அத்தையை விவாகம் செய்ய தடையுள்ளது (லேவி. 18:14; 20:20). இந்த இரண்டு உறவுகளுக்கு உள்ள தடைக்கு விளக்கம் கொடுக்கப் படவில்லை. ஆனால் சிலர் சொல்கின்றனர், முந்தினது மிகவும் ஏற்புடையது, ஏனெனில் ஆண் முந்திய

தலைமுறையினர் என்பது ஆகும்.

"சாராய்" என்பது ஆபிரகாமின் மனைவியின் இயற் பெயராகும். இது "சாராள்" என மாற்றப்பட்டது, இரண்டும் ஒரே பொருளை யுடையதாயிருக்கும் (שָׂרָה, *śarah*, சாரா), "இளவரசி" என்பது பொருள். "மில்க்காள்" என்பது (מַלְכָּה, *malkah*, மல்க்கா), "அரசி" என்பது பொருள். பண்டைய மெசெப்பொத்தோமியாவின் அக்காடியன் பாஷையில் "*சாரட்டு* என்பவள் சின் என்ற சந்திரக் கடவுளின் மனைவியாகவும் மல்கட்டு அவனுடைய மகளாகவும் இருந்தனர்."[18] சாராய் (சாராள்) மற்றும் "*மில்*க்காள்" போன்ற பெயர்கள் எப்படிப்பட்ட புராணங்களிலிருந்தும் கிடைத்திருக்கலாம். யோசுவாவின் கூற்றுப்படி தேராகு, ஆபிரகாம் மற்றும் அவர்களின் தகப்பன் நாகோர் ஆகியோர் ஆற்றுக்கு (ஐபிராத்து) அப்பால் வாழ்ந்தபோது வேறு தெய்வங்களை ஆராதித்தவர்கள் (யோசுவா 24:2). ஊரும், ஆரானும் முற்பிதாக்களுக்கு ஆதி வீடுகளாயிருந்தது. இவை சின் என்ற சந்திரக் கடவுள் வணங்கப்பட்ட மையமாயிருந்தது. இதனாலேயே தேவன் ஆபிரகாமை கலாச்சாரம், மதம், மற்றும் குடும்பக் கட்டுகளிலிருந்து பிரித்திருந்தார். இந்த இரண்டு இடங்களையும் விட்டு கானானில் ஒரு புதிய தொடக்கத்திற்காக அழைத்தார்.

## தேராகுவின் குடும்பம் குடிபெயர்தல் (11:31, 32)

**31தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள். 32தேராகுடைய ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம்; தேராகு ஆரானிலே மரித்தான்.**

**வசனம் 31.** இவ்வசனத்தில் ஆபிரகாமை அழைத்து, **ஊர் என்னும் கல்தேயர்** நாட்டை விட்டு, **கானான் தேசத்திற்கு போகும்படி**, தேவன் சொன்னதாகக் கூறப்படவில்லை, என்றாலும், ஆதியாகமம் 15:7; நெகேமியா 9:7; மற்றும் அப்போஸ்தலர். 7:2-4 ஆகிய வசனங்களிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இந்த வேளையில், தேவனுடைய அழைப்பு ஏற்பட்டிருந்தது என்று இதை வாசிப்பவர்கள் அறிந்திருந்தனர் என்பதாக இந்நூல் ஆசிரியர் கருதியிருப்பதாகக் காணப்படுகிறது; இல்லையென்றால் ஊர் என்னும் ஊரில் உள்ள தங்கள் வீட்டை விட்டு அறியப்படாத வேறு தேசத்திற்கு, கடினமான நீண்ட பயணத்தை செய்ய வெளிப் படையான வேறு காரணங்கள் இருந்திருக்காது. ஆதியாகமம் 11:31 எதை சுட்டிக்காட்டுகின்றது என்றால், தேவன் ஆபிரகாமுக்கு

கூறியதைப் போல தன் குடும்பத்தை விட்டுவிட்டு செல்லாமல், குடும்பத் தலைவன் என்கிற பொறுப்போடு **தேராகு** செயல்படுத்தி **ஆபிராம்**, **லோத்து** மற்றும் **சாராயை** கூட்டிக்கொண்டு **கானானுக்கு போகப் புறப்பட்டான்** என்பதையே.

ஏதோ ஒரு காரணத்தினால், அந்தக் குடும்பம் அவர்கள் பயணத்தை விரைவாய் முடித்துக் கொள்ளவில்லை. வேதம் சொல்லுகிறது, **அவர்கள் ஆரான்** மட்டும் சென்று **அங்கே இருந்துவிட்டார்கள்** என்று. “ஆரான்” வடமேற்கு மெசெப்பொத் தோமியாவில், ஐப்பிராத்து நதியின் கிளை நதியில் அமைந்துள்ளது. அது ஊருக்கும் கானானுக்கும் உள்ள தூரத்தில் பாதி தூரத்தைவிட கொஞ்சம் அதிகம்.

**வசனம் 32. தேராகு** 205 வயதாகி **மரிக்கும்** வரை அவர்கள் பல வருடங்கள் **ஆரானிலே** இருந்தார்கள். ஆபிரகாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து கானானுக்கு சென்றான் (12:1-3).

தேராகின் 205 வயது காலம் என்பது காலக்கணிப்பில் புதிராக பார்க்கப்படுகிறது. சிலர் 11:26ல் கூறப்பட்டுள்ளது போல ஆபிரகாம் பிறக்கும் போது தேராகு 70 வயதாக இருந்தான் என்று புரிந்து கொள்கின்றனர். இது தன் தகப்பனாகிய தேராகு ஆரானிலே மரித்து ஆரானை விட்டுப்புறப்பட்ட போது ஆபிரகாமிற்கு 135 வயது என்று ஆக்குகின்றது. ஆனால் 12:4 தெளிவாக கூறுகிறது என்னவென்றால், ஆபிரகாம் ஆரானை விட்டு கானானுக்கு புறப்பட்ட போது 75 வயதாய் இருந்தான் என்று. இக்காரியத்தை தெளிவுபடுத்த பல கருத்துக்கள் கூறப்பட்டது, ஆனால் பிரதானமான 2 காரியங்கள் மட்டுமே விவாதிக்கப்பட உள்ளன.

முதல் விளக்கத்தில், தேராகு மரித்த போது 11:32ல் உள்ள அவனுடைய வயது கருத்தில் கொள்ளப்பட்டது. மெசொரிடிக் வாக்கியத்தில் (Masoretic Text) அவன் 205 வயதாய் இருந்தான் என்றும், சமாரியா ஆகமத்தில் அவன் 145 வயதாய் இருந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இரண்டாவதாக கூறப்பட்டது மூல மொழியை பிரதிபலிப்பதாக சில வல்லுனர்கள் கருதுகின்றனர். ஒருவேளை இக்கருத்து சரி என்றால் தேராகு 70 வயதாக இருந்த போது ஆபிரகாம் பிறந்தான் மற்றும் ஆபிரகாம், தன் தகப்பன் 145 வயதில் மரித்த போது 75 வயதாக இருந்திருக்க வேண்டும். இது பிரச்சனையைத் தீர்க்கும், ஆனால், சமாரியா ஆகமம் மூலமொழியை சரியாக பிரதிபலிக்கின்றதா என்கிற சந்தேகம் எழுகின்றது. குறிப்பாக பல இலக்கங்கள், சமாரியா ஆகமத்திற்கும், மெசொரிடிக் வாக்கியத்திற்கும் வேறுபட்டுள்ளது. ஆகவே ஆபிராம் பிறந்த போது தேராகின் வயதில் சந்தேகங்கள் எழுகிறது.

இந்த பிரச்சனைக்கு மிக சாத்தியமான தீர்வாகக் கூறப்படுவது என்னவென்றால், ஆபிரகாம் தேராகின் முதல் மகன் இல்லை என்பது. குடும்ப பட்டியலில் கட்டாயம் முதல் பிறந்தவரின் பெயரே முதலில்

குறிப்பிடப்பட வேண்டிய அவசியமில்லை. மாறாக முதலில் பிறந்தவராய் இருப்பதற்குப் பதிலாக இறையியலின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கலாம். எனவே 11:26ல் கூறப்படுவது, தேராகு தனது 70 வது வயதில் தகப்பனாகி இருக்கலாம் என்பதாக - ஒருவேளை முதலாவதாக மரித்த ஆரானுக்கு (11:28) - தன் தகப்பன் 130 வயது ஆகும் வரை ஆபிரகாம் பிறக்கவில்லை. தேராகுடைய ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம், ஆரானை விட்டு போகும் போது ஆபிரகாமுக்கு எழுபத்தைந்து வயதிருக்கும்.

## நடைமுறைப்படுத்துதல்

### பாபேல் கோபுரம் (11:1-9)

ஆதாம் மற்றும் ஏவாளின் ஆதி கீழ்ப்படியாமையினால் அக்குடும்பத்தின் முதல் கொலை மூலமாக பரவின பாவத்தையும் பிரளயத்திற்கு வழிவகுத்த, பரவியிருந்த அக்கிரமத்தையும் நாம் அடையாளம் கண்டோம். இந்த காரியங்கள் படைத்தவரிடமிருந்து தொடர்ந்து விலகுவதையே காட்டுகிறது. மனிதன் படிப்படியாக தனக்குள்ளேயே தேவ சாயலை அழித்துக் கொண்டிருந்தான், ஆனால் பாபேல் கோபுரம் கட்டப்பட்டதினால் பெரும் மாறுதல் நடந்தது. மனித குலத்தின் கேடு இன்னமும், முன்னிலை பெற்றதாக இருக்கவில்லை; தேவனைப் பற்றிய பிறழ்வான பார்வை ஜனங்களுக்குள் இருந்தது இங்கு தெளிவாக்கப்பட்டது. நோவா வம்சத்தில் பலர் ஏற்கனவே நீதியிலும் கர்த்தருக்குள்ளும் குற்றமுள்ளவர்கள் ஆனார்கள் - மதத்திலும் இறையான்மையிலும் ஆதரவற்றவர்கள் ஆனார்கள். அவர்களால் தேவனின் உண்மையான குணாதிசயத்தை அறிய முடியவில்லை. இப்பகுதி வரை, ஆதியாகமத்தில் பாவத்தின் முன்னேற்றமும் நெறிமுறைகளில் குறைகளையுமே ஒப்பிட்டு காண்பிக்கிறது. ஆனால் பாபேல் கோபுரத்தின் கதை, தேவனைப்பற்றிய புரட்டப்பட்ட எண்ணங்கள் பரவியுள்ளதையே வெளிப்படுத்துகிறது.

*கட்டியவர்களின் பெருமை.*

1. கோபுரத்தை கட்டியவர்களின் பாவம், பெருமை. அதுவே அவர்களை தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போகச் செய்தது (11:1, 2, 4). பிரளயத்திற்கு பின் நோவாவின் சந்ததியின் குடும்பத்தினர் ஒரே பாஷையை பேசினார்கள். கிழக்கே பிரயாணம் பண்ணி சிமெயார் தேசத்தில் சமபூமியைக் கண்டு (இக்காலத்து பாபிலோனின் ஒரு பகுதி) அங்கேயே எல்லாரும் தங்கி குடியிருந்தார்கள். அங்கே அவர்களுக்குள் ஐக்கியத்தைக் கொண்டு வர முயற்சித்தார்கள். இது “பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்” என்ற தேவ கட்டளையை எதிர்த்து எடுத்த முடிவாகும் (9:1; காண்க 9:7). தெளிவாக, அவர்களுக்குள் பிரிவினையின்

விதை இருந்தது. மேலும் அவர்கள் "பூமியின் மீதெங்கும் சிதறிப்போகும்" ஆபத்தில் இருந்ததாக உணர்ந்தார்கள் (11:4). அவர்களது பெருமையினால் தேவ நோக்கத்தை முறியடிக்க ஒரு திட்டம் தீட்டி அவர்களுக்குள் ஒற்றுமையை உண்டு பண்ண எண்ணினார்கள். இதில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், மெய்யான ஒற்றுமை தேவனுக்குக் கீழ்ப்படிவதிலேயே வருமே தவிர, அதை எதிர்ப்பதினால் ஒருபோதும் வராது. ஒற்றுமையின் அடிப்படையின் காரியம் எது என்றால், சத்தியத்தில் பரிசுத்தமாய் இருப்பது (காண்க யோவான் 17:17-21). "மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம், ஆனாலும், கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்" என்று ஞானி கூறுகின்றான் (நீதி. 19:21).

2. மக்களின் பெருமையான நோக்கம் அவர்களின் திறமையினால் வலுவூட்டப்பட்டிருந்தது. அவர்கள் நகரத்தையும், வானத்தை அளாவும் கோபுரத்தையும் கட்ட துவங்கினார்கள். இந்த முயற்சி நிச்சயமாக பலரின் கூட்டு முயற்சியாலும், பல காலங்களும் தேவைப்பட்டிருக்கும். ஐப்பிராத்து பள்ளத்தாக்கில் அவர்களுக்கு நல்ல மணலில் கல் இல்லாததினால், கல்லுக்கு தேவையான பொருட்களையும், மணலையும் சேகரித்து அதை சுட்டு கற்களை உண்டாக்கினார்கள். அதன் பிறகே கோபுரத்தை கட்ட ஆரம்பித்தார்கள் (11:3, 4).

நிம்ரோத் என்பவனே இக்காரியத்தின் தூண்டுகோலாக கண்டறியப்பட்டுள்ளான். அவன் "பூமியிலே பராக்கிரமசாலியாக இருந்தான்" ஏனென்றால் "பாபேலே அவன் இராஜ்ஜியத்தின் துவக்கம்" என்று வாசிக்கிறோம் (10:8, 10). நிம்ரோத்தின் வெற்றி என்று பாபிலோனை பற்றிக் கூறுவது, பிற்காலத்தில் அவன் பெற்ற வெற்றியையே குறிக்கிறது. ஏனென்றால் 11:1-9ல் கூறப்பட்டுள்ள கட்டுமானப்பணி தோல்வியடைந்தது. மக்கள் சிதறடிக்கப் பட்டார்கள். நிம்ரோத்தே கோபுரத்தின் மூல கட்டிட பொறியாளராக இருக்க வாய்ப்புகள் உள்ளது. அவனது முதல் முயற்சியை தேவன் சிதறடிக்கப்பண்ணின பின் சில காலம் கழித்து அவன் வந்திருக்கலாம் என்றாலும், பாபிலோனையும் மற்ற மெசெப்பெத்தோமியா நகரங்களையும் கட்டுவதில் அவன் வெற்றி பெற்றான். பின்னர் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நேபுகாத்நேச்சார் காலத்தில் அது கட்டிமுடிக்கப்பட்டது. ஆனால் பாபேல் கட்டி முடிக்கப்படவில்லை. வீண் பெருமையும் புகழுமே கட்டப்பட்டது. மேற்கு ஆசியாவை கைப்பற்றியவர்களாய் பாபிலோனியர்கள் அந்நகரத்தை தேவனுக்கு விரோதமாய் எழுப்பி பிற தெய்வங்களை வணங்கினார்கள் (தானி. 3; 4).

3. பெருமை அவர்களை தற்பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் ஊக்குவித்தது. அவர்கள் தங்களுக்கு "பெயர்" உண்டுபண்ண வேண்டும் என்றார்கள் (11:4). சிலர் உயரமான கோபுரத்தைக் கட்ட நினைத்தார்கள், ஏனென்றால் வேறு வெள்ளம் வந்து அவர்களை

அழிக்காமல் இருக்க. என்றாலும், இது அவர்களது நோக்கமாய் இருந்திருந்தால் சமவெளியில் கட்டாமல் உயரமான மலைகளில் கட்டியிருப்பார்கள். மற்றவர்கள் இது எதிரிகளிடமிருந்து தங்களை காத்துக்கொள்ள தற்காப்பிற்காக கட்டப்பட்டது என்று எண்ணினார்கள். பிற்காலத்தில் கோபுரங்கள் இணைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்ட இயந்திரங்களிடமிருந்து நகரத்தைக் காப்பாற்றவும் மதிற்சுவரை தாக்காமல் இருக்கவும் கட்டப்பட்டது. எனினும் கோபுரங்கள் கட்டப்பட்டதற்கான நோக்கம் என்னவென்றால் மக்களை ஒன்றாக இணைத்து ஒற்றமையாக இருக்கச் செய்யவும், வலிமையுள்ளவர்களாக ஆக்கவும் வேறு எந்த எதிரிகளும் அண்டாமல் இருக்கவுமே. இறுதியில் இவர்களது முயற்சி முறியடிக்கப்பட்டது. இவர்கள் பூமி எங்கும் சிதறடிக்கப் பட்டார்கள்.

இக்கதையை முதலில் வாசித்த இஸ்ரவேல் மக்களுக்கு இது ஒரு பாடமாக அமைந்திருக்கும். ஒரு தேசமாக இருக்க வேண்டு மென்றால் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், அதை எதிர்த்து அல்ல என்று யாவே (தேவன்)க்கு உண்மை இல்லாதவர்களாய் இருந்தால் உடன்படிக்கையின் சாபம் அவர்கள் மேல் வரும் என்று மோசே எச்சரித்திருந்தான். இந்த சாபம் எதிரிகளால் முறியடிக்கப்படுவது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்தை அடையாமல் இருப்பது, இதோடுகூட பூமியின் ஒரு முனையில் இருந்து மறுமுனை மட்டும் சிதறடிக்கப்படுவது போன்ற காரியங்களை உள்ளடக்கியது (உபா. 28:15-68). கோபுரம் கட்டியவர்களுக்கு வந்த அழிவே இந்த இஸ்ரவேல் மக்களிடையே பரவியது - பெருமை. "அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்று சாலொமோன் ஞானி கூறுகின்றார் (நீதி. 16:18; காண்க 18:12). இயேசுவும் இதையே கற்றுக்கொடுத்தார். "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத். 23:12)

இக்கோட்பாடு தனி மனிதனுக்கு மட்டுமல்லாது நகரங்களுக்கும் தேசங்களுக்கும் பொருந்தும். நம் வாழும் இந்த உலகத்தில் மக்கள் நகரங்களில் மிக அருகில் வசிப்பதால் தனிமை என்பது இல்லாமல் போய்விட்டது. ஆனால் ஆழமான ஏக்கம் பிரிக்கப்பட்ட எண்ணம் யாருடனும் சேராமல் இருப்பது போன்ற உணர்வு மக்களை தங்கள் அடையாளத்தை இழக்கச் செய்கிறது. இந்த அடையாள தேடல் தங்களை தைரியம் கொள்ளவும் அல்லது அதிகமான நேரம் வேலை செய்யவும் தூண்டும். இது புகழடைய முயற்சிப்பது என்ற இழிவான காரியங்களைச் செய்ய காரணமாக அமையும். புகழையும் எண்ணத்தினால் நம்பிக்கை இழந்த வாழ்க்கையே கிட்டுகிறது. இது சட்டப்படியாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பாகவோ இருக்கலாம். ஏன்றாலும் இத்தகைய மகிமை சீக்கிரத்தில் மங்கிவிடும். காரணம் உண்மையான பதுகாப்பு கிடைக்காது, மாறாக தனிமை, கசப்பு மற்றும்

வெறுமையே மிஞ்சும். வெஸ்ட்மின்ஸ்டர் கன்பேஷன் ஆஃ ஃபெய்த் (Westminster Confession of Faith) குறிப்பிடுகிறதாவது, "மனிதனின் இறுதி நோக்கம் என்ன வென்றால் தேவனை மகிமைப்படுத்தி அதினால் மகிழுவதே."[19] மக்களும் தேசமும் தற்பெருமையை தேடிக்கொள்ளும்வரை தங்களைத் தாங்களே அர்த்தமற்ற வாழ்வில் தொலைத்துக் கொண்டே இருப்பார்கள்.

*அவர்களது எதிர்ப்பிற்கு தேவனின் மறுமொழி.*

1. மனிதனின் பெருமையான எதிர்ப்புமிக்க செயலுக்கு தேவன் திடமான மறுமொழியைக் கொடுத்தார். பாவம் நிறைந்த பாபேல் ஜனத்தின் கொடூரத்தை தேவன் பார்த்தார் (11:5). "மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும், கோபுரத்தையும் பார்க்கிறதற்கு கர்த்தர் இறங்கினார்" என்கிற வாக்கியத்தில் தேவனின் செயலை மனித முறைமைக்கு அவர் எண்ணத்தையும் உணர்ச்சிகளையும் விளக்குகிறது. இத்தகைய இலக்கியம் தேவன் மனிதனின் காரியங்களில் தலையிடுகிறார் என்று விளக்கிக்காட்ட பயன் படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் இறங்கினார் என்பது, அவர் அவர்களது செயலைக் குறித்து முன்னமே அறிந்திருந்தார் என்று பிரதிபலிக்கிறது. கர்த்தர் அவர்களைக் கண்காணிக்க எழுத்தின்படி இறங்கி வரவில்லை, இதே போன்ற மற்றொரு எதிர்ப்பின் போது மற்றொரு வேதப்பகுதியிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சங்கீதம் 2:4 கூறுகிறது "பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார், ஆண்டவர் அவர்களை இகழுவார்" என்று. வேறு வார்த்தைகளில் கூறினால், தேவன், ஆதாமும் ஏவாளும் எங்கிருந்தார்கள் என்றும் அதற்குமுன் என்ன செய்தார்கள் என்றும் அறிந்து அவர்களிடம் தங்கள் பாவத்தைக் குறித்து வினவியது போலவே (3:9, 13), கர்த்தர் மனிதனின் எல்லா திட்டங்களையும் செயல்களையும் நன்றாகவே அறிந்திருந்தார். காயீனிடம் ஆபேலைப் பற்றி விசாரித்த போது இது உறுதிப்படுத்தப்பட்டது (4:9, 10). இதே போல் அவர் பாபேல் மக்களின் திட்டங்களைக் குறித்தும் அவர்களை ஊக்குவித்த அவர்களது மூர்க்கத்தனத்தைக் குறித்தும் அறிந்திருந்தார் (காண்க சங். 139:1-6).

2. கர்த்தர் அநேகர் மொத்தமாக விசுவாசத்தைவிட்டு விழுந்து போகுதலின் ஆபத்தைக் குறித்து விழிப்புணர்வு உடையவராய் இருந்தார் (11:6, 7). மனிதன் ஒற்றுமையாக இருந்து கர்த்தருக்கு விரோதமான கலகத்தைச் செய்ய அனுமதித்தால் அவர்கள் தவறான வல்லமைளை உணர்ந்து பெரும் எதிர்ப்பிற்கும் கீழ்ப்படியாமைக்கும் வழிநடத்தப்படுவார்கள். ஒரு வகையில் வானுயர கோபுரத்தைக் கட்டுவது பாபேல் மனிதர்கள் பரலோகத்தின் வாசல்களுக்குப் படை எடுத்ததை ஊடுருவ நினைப்பதைக் காட்டுகிறது. அவர்கள் கர்த்தர் கொடுத்த எல்லையை மீற முயற்சித்தார்கள். அவர்களுக்கு தகுதி இல்லாததை அடைய எண்ணினார்கள், மற்றும் கர்த்தர் நிர்ணயம் செய்த எல்லையையும் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார்கள். ஒரு கூட்டமாக

தேவனின் பரிசுத்தத்தையும், எல்லையையும் புறக்கணித்தார்கள். பரலோகத்திற்கும் பூமிக்கும் தேவையான வித்தியாசத்தை ஏற்காமல் இருந்தார்கள்.

பாபேல் மக்களிடமும் இன்றைய மக்களிடமும் இருக்கிற பெரும் பாவம் என்னவென்றால் கர்த்தரே தேவன் என்று கண்டு கொள்ளாமல் இருப்பதே. பெலவீனமான பாவம் நிறைந்த மக்களாகிய நாம் சில சமயம் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தேவனை நம் விதிகளின்படியே சந்திக்கிறோம். அல்லது அவரது இடத்தை எடுக்க எண்ணுகிறோம். ஏதேனின் பாவம் துவங்கி, மனிதனின் பெரிய கவர்ச்சி என்னவென்றால் தெய்வதன்மையை அடைய நினைப்பது தான்.

பெருமை பாவத்திற்குள் வழி நடத்தும், பாவம் எதிர்ப்பிற்கு அதாவது தேவனை எதிர்ப்பதற்கு வழி வகுக்கும். பெருமை என்பது தேவன் இல்லாமல் தனித்து இருக்க தன்னை தான் வற்புறுத்திக் கொள்ளும் தன்மை, வானத்தையும் பூமியையும் படைத்தவரிடம் தன்னைத்தானே ஒப்படைத்து அவரைச் சார்ந்திருப்பதற்கான எதிர்ப்பின் நிலை. பாபேல் கோபுரம், மனிதனின் மேன்மையை செயல்முறைப்படுத்திக் காட்டும் சிறப்ப சாதனையாகும். இதன் வெற்றியானது மனிதனுக்கு பொய்யான பாதுகாப்பையும் தங்கள் இறுதி இலக்கை அடைய கட்டுப் படுத்தப்பாட்டையும் கொடுத்திருக்கும்.

ஏதோ இதைப் போன்ற ஒரு வகையில், இன்றைய மக்களும், ராணுவ பலத்தையும், அறிவியலின் சிறப்பையும், விஞ்ஞான வளர்ச்சியையும் நம்புவதற்கு தூண்டப்படுகிறார்கள். இது நிம்மதியையும் பாதுகாப்பையும் நீண்ட வாழ்வையும் தேவன் இல்லாமலேயே வழங்குவது போல தெரியலாம். நாம் தற்கால வளர்ச்சிக்கு பல வகைகளில் நன்றி சொல்ல வேண்டும், என்றாலும், இவை அனைத்தும் நமக்கு நம் சொந்தக் கடவுள்களாக மாறாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். மனிதன் தன் சொந்த அறிவினால் பரலோகத்தை சேர முடியாது. எந்த அளவிற்கு மனிதன் தேவனாக நினைக்கிறானோ அந்த அளவிற்கு அவன் பிசாசாக மாறுகிறான்.

3. தேவனின் தீர்ப்பு பாபேல் மக்கள் மேல் விழுந்தது. அவர்களது பாஷையை தாறுமாறாக்கி "பூமியெங்கும் சிதறிப்போகப்பண்ணி" அவர்களது எதிர்ப்பின் ஒற்றுமையை விலக்கினார் (11:7-9). தேவனின் கிருபையும் இந்த நிகழ்வில் வெளிப்படையாக தெரிகிறது. மீண்டுமாக ஆதாம் மற்றும் ஏவாள், காயீன் மற்றும் பிரளயத்திற்கு முன்னான உலகத்தில் இருந்தது போலவே பாபேல் கோபுரத்தின் தீர்ப்பின் மத்தியிலும் தேவனின் கிருபை இருந்தது. "பாவத்தின் சம்பளம் [தண்டனை] மரணம்" (ரோமர் 6:23; காண்க ஆதி. 2:17). வரலாற்றில் கவனித்து பார்த்தால் தேவன் மரணத்திற்கு பாத்திரமான மக்களை மனந்திரும்ப வாய்ப்பளித்து வாழவைத்துள்ளார். மனிதனின் எல்லா கணக்கையும் அவன் உலகில் வாழும் போதே தீர்க்க மாட்டார். அவர்

பாவமான மனிதகுலத்தைக் குறித்து நீடிய பொறுமையுடையவராய் இருந்து அவரது சாயலில் படைக்கப்பட்ட நாம் நித்திய அழிவிற்குள் செல்லாமல் இருக்க மனந்திரும்புதலுக்காய் அழைக்கிறார் (2 பேதுரு 3:9-13).

தேவன் பண்டைய பாபேலை தனக்கு மறுமொழி கொடுக்கவோ, இன்றைய மக்கள் தனக்கு கீழ்ப்படியவோ கட்டாயப்படுத்த மாட்டார். வேதாகமத்தில் அதிகமாக கூறப்படுகிற செய்தி என்னவென்றால், தேவன் பாவிகளை நேசிக்கிறார், அவர் அவர்களை அழிக்காமல் காக்க ஆசைப்படுகிறார். அந்த தெய்வீக அன்பின் பிரதான வெளிப்பாடு இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 3:16-22; 5:24-29). ஏனென்றால் "சரீரத்தில் அவனவன் செய்த" "நன்மைக்காவது தீமைக்காவது" தக்க பலனை அடையும்படிக்கு, "நம்மெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" (2 கொரி. 5:10). அடிப்படையில் "தேவனின் இரக்கமே" நம்மை மனந்திரும்புதலுக்கு வழி நடத்தும் (ரோமர் 2:4-8).

---

இறுதிக் குறிப்புகள்

[1]*The Creation Epic* 6.52, 54, 58, 75. [2]சுமேறியன் "Enmerkar and the Lord of Aratta" என்று அழைக்கப்படுகிறது. இதின் மொழிபெயர்பிற்கு, William W. Hallo, ed., *The Context of Scripture* (Boston: Brill, 2003), 1:547–50. [3]Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 236–37. [4]Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 869. [5]காண்க 10:10; 11:2, 9; ஏசாயா 11:11; தானி. 1:2; சக. 5:11. செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பு ஏசாயா 11:11ல் "சிநேயாரை" "பாபிலோனியா" எனவும், சகரியா 5:11ல் "பாபிலோனின் தேசம்" எனவும் வியாக்கியானம் செய்கிறது. [6]Herodotus *Histories* 1.181. [7]ஆதியாகமம் 6:4 காண்க, அங்கே "புகழ் பெற்ற மனுஷர்கள்" என்பது எழுத்தின்படி "பெயர் பெற்ற மனுஷர்கள்" என்று பொருட்படுகிறது. அவர்கள் மீறுதலுக்கும் பொல்லாப்பிற்கும் பெயர் பெற்று இருந்தார்கள் (6:5, 11). இக்கருத்து பிரபலமாவதை குறித்த எண்ணத்தையே பிரதிபலிக்கிறது. ஆனால் அவர்களது செயலின் நோக்கம் நல்லதா தீயதா என்பதையும் கருத்தில் கொண்டுள்ளது (காண்க 2 சாமு. 8:13; நெதே. 9:10; எரே. 32:20). ஆதியாகமம் 6:4ல் உள் நோக்கம் கர்த்தரின் சித்தத்திற்கு எதிர்மறையாக உள்ளது. [8]Jeffrey S. Rogers, "Babel, Tower of," in *Eerdmans Dictionary of the Bible*, ed. David Noel Freedman (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2000), 138. [9]David F. Payne, "Babel, Tower of," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 1:382. [10]11ஆம் அதிகாரத்தில் நோவாவின் பெயர் இல்லை, எனினும், மத்தேயு எக்கோனியாவை இரு முறை எண்ணிண போது இந்த வழியை உபயோகித்தான்: ஒரு பகுதியின் முடிவிலும் அடுத்த பகுதியின் துவக்கத்திலும் (மத். 1:11, 12).

[11]லூக்கா 3:34-38ல், ஆபிரகாம் ஆதாமின் 21 ஆவது வம்சமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வம்ச எண்ணிக்கை எல்லா நேரமும் ஒரேமாதிரி கணக்கிடப்படுவதில்லை. அதில் சற்று குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த பெயர்கள் சேர்க்கப்படாது. [12]வம்ச வரலாற்றின் அட்டவனையை காண்க, Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A (Nashville: Broadman & Holman Publishers, 1996), 488. [13] John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 200. [14]Brown, Driver, and Briggs, 974. [15]Richard S. Hess, "Serug," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 5:1117–18. [16]Yoshitaka Kobayashi,

"Haran," in *The Anchor Bible Dictionary*, 3:58. [17]See the photo of the ziggurat at Ur, as well as images of reconstructions of the ziggurat at Babylon, in John H. Walton, "Genesis," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Genesis, Exodus, Leviticus, Numbers, Deuteronomy*, ed. John H. Walton (Grand Rapids, Mich.: Zondervan, 2009), 61–63. [18]Wenham, 273. [19]*The Westminster Confession of Faith*, with Introduction and Notes by John Macpherson (Edinburgh: T. & T. Clark, 1881), 123.